**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் :SC.No. 395/2025**

**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேல்ச்சாமி | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | மலையான்குளம் | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சின்னக்கோவிலான்குளம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். நான் அய்யாபுரம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது, கடந்த 10.01.2023 ம் தேதி, 15.00 மணிக்கு நான் பணியில் இருந்போது நிலையம் வந்த மாரிராஜ் என்பவர் கொண்டு வந்த புகார் மனுவைப் பெற்று அதனை சிஎஸ்ஆர் பதிவேடு எண்.13/2023 என பதிவு செய்தேன். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

சம்பவ தினத்தில் நான் காவல்நிலையத்தில் நிலைய எழுத்தராக பணிபுரிந்தேன். உதவி ஆய்வாளர் விசாரணையில் இது குறித்து சொன்னேனா? என்றால் எனக்கு ஞாபகமில்லை. புகார் பெற்ற போது, உதவி ஆய்வாளர் காவல்நிலையத்தில் இருந்தாரா? என்றால் இல்லை. புகார் மனு

நான் எவ்வளவு நேரம் கழித்து உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. புகார் மனுவில் புகார் கொடுத்த தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

புகார் மனுவை எழுதித்தான் கொடுத்தார்கள், காவல்நிலையத்தில் வைத்து எழுதி கொடுக்கவில்லை. புகார் மனுவிற்கு கீழ் புகார் மனு பெறப்பட்டு சிஎஸ்ஆர் எண் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டுள்ளதின் கீழ் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை காவல்நிலைய அசிஸ்டெண்ட் ரைட்டர் எழுதினார். புகார் மனுவின் 2வது பக்கத்தில் மேல்சைடில் எழுதப்பட்டுள்ளதும், என்னுடைய கையெழுத்திற்கு மேல் எழுதப்பட்டுள்ளதும் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

நான் சொன்ன நாளில், நேரத்தில் புகார்தாரரிடமிருந்து எந்த புகார் மனு பெறவில்லை என்றாலும், சிஎஸ்ஆர் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. என்னுடைய மேலதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.03 19:21:12 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் :SC.No. 395/2025**
**வழக்கு சாட்சி PW–10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முத்துக்குமார் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | வன்னிக்கோனந்தல் | வயது | : | 61 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று வன்னிக்கோனந்தலில் குடியிருந்து வருகிறேன். நான் அய்யாபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 10.01.2023ம் தேதி, 10.00 மணிக்கு சிஎஸ்ஆர் எண்.13/2023 ன் படி பதிவு செய்யப்பட்டிருந்த புகார் மனுவை பரிசீலனை செய்து, அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.3/2023, சட்டப்பிரிவுகள் 448, 438, 427, 294(பி), 506(1) IPCன் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும்.

பின்னர் இந்த வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 11.01.2023 ம் தேதி, 12.00 மணியளவில் சாட்சிகள் குமார் மற்றும் பெரியதாய் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்தேன். அந்த வரைபடங்கள் **அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12** ஆகும். சம்பவயிடத்தில் கிடந்த தீயில் கருகிய சருகை சாக்குகள் – 10 எண்ணிக்கைகளையும், தீயில் கருகிய துண்டு ஒன்றையும் 12.30 மணிக்கு அத்தாட்சியில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.13** ஆகும். தீயில் கருகிய சருகை சாக்குகள் – 10 எண்ணிக்கை – அ.சா.பொ.1 வரிசை ஆகும். தீயில் கருகிய துண்டு ஒன்று – அ.சா.பொ.2 ஆகும்.

பின்னர், 2 வது சம்பவயிடமான வாதியின் தோட்டத்தில் காணப்பட்ட ரூ.1000/– மதிப்புள்ள சொட்டு டேங்க் ஒன்றும், ரூ.1000/– மதிப்புள்ள பிவிசி பைப்புகள் ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.14** ஆகும். சொட்டு டேங்க் ஒன்று – அ.சா.பொ.3 ஆகும். பிவிசி பைப்புகள் – அ.சா.பொ.4 ஆகும். பின்னர், சாட்சிகள் மாரிராஜ், லதா, முத்துராணி, ராமர்பாண்டி, லட்சுமணபாண்டியன், மகாராஜன், குமார், பெரியத்தாய் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், காவல்நிலையம் வந்து மாரிராஜீக்கு மனு ரசீது வழங்கிய தலைமைக்காவலர் பழனிச்சாமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

11.01.2023 ம் தேதி, 15.30 மணியளவில் வழக்கின் எதிரியை அவருடைய வீட்டின் முன்பு வைத்து கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர், 31.01.2023 ம் தேதி, எதிரி சம்பவத்திற்கு

பயன்படுத்திய TN–74–AD–6755 என்ற எண் கொண்ட ேஹாண்டா டிவிஸ்டர் இருசக்கரவாகனத்தை சாட்சிகள் மகேஷ்பாண்டியன், பெருமாள் ஆகியோர்கள் முன்னிலையில் சேர்ந்தமரம் காவல்நிலையத்திற்கு அருகில் வைத்து அத்தாட்சியில் கைப்பற்றினேன். TN–74–AD–6755 என்ற எண் கொண்ட ேஹாண்டா டிவிஸ்டர் இருசக்கரவாகனம் – அ.சா.பொ.5 ஆகும்.

06.02.2023ம் தேதி சேதமதிப்பு சான்றிதழ் வழங்கிய கோபால் என்பவரை விசாரித்து சேதமதிப்பு சான்றிதழ் பெற்றேன். பின்னர், கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.15, அ.சா.ஆ.16** ஆகும். ஆகும்.

பின்னர், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 448, 438, 294(பி), 302, 427 IPC –ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

புகார் மனு மற்றும் சிஎஸ்ஆர் பதிவேடு விபரங்கள் என்னுடைய விசாரணைக்கு எப்போது ஒப்படைக்கப்பட்டது என்றால் 10.01.2023 அன்று ஒப்படைக்கப்பட்டது. சிஎஸ்ஆர் பதிவேடு நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கை பதிவு செய்வதற்கு முன்னால் சாட்சிகளை நான் விசாரிக்கவில்லை. வாழைமரங்கள் வெட்டப்பட்டது சம்பந்தமாக வேறு புகார் காவல்நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரிதான்.

சம்பவயிடத்திற்கு என்னுடன் போலீசார் வந்தார்கள். யார், யார் வந்தார்கள் என்றால் பழனிச்சாமி என்பவர் வந்தார். வாதியின் வீட்டின்

முன்பு முதலில் விசாரணையை தொடங்கினேன். பழனிச்சாமி என்பவர் தலைமை எழுத்தர் என்றால் சரதான். அவர் தான் சிஎஸ்ஆர் பதிவு செய்தார். சம்பவயிடத்தில் சுத்தப்படுத்தப்பட்டிருந்ததா? என்றால் இல்லை. நான் சென்றபோது, உளுந்துகள் சிந்தி கிடந்ததா? என்றால் தீ வைக்கப்பட்டிருந்தது. உளுந்தை நான் கைப்பற்றவில்லை. அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்பதினால் தான் உளுந்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சாக்கை புகார்தாரர் ஒப்படைத்தாரா? என்றால் நாங்கள் கைப்பற்றினோம். புகாரில் உளுந்து எவ்வளவு சேதமடைந்தது என்று மதிப்பு சொல்லவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரரின் வீட்டிற்கு முன்னால் காம்பவுண்ட் சுவர் கேட்டுடன் உள்ளது என்றால் சரிதான். அந்த கேட் உடைக்கப்பட்டதாக என்னுடைய விசாரணையில் தெரிய வரவில்லை. காம்பவுண்ட் சுவர் கடந்து எவ்வாறு எதிரி அ.சா.1ன் வீட்டில் நுழைந்தார் என்று என்னுடைய விசாரணையில் தெரியவரவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சம்பவநேரத்தில் காம்பவுண்ட் சுவருக்குள் உள்ளே எதிரி நின்றாரா? காம்பவுண்ட் சுவருக்குள் வெளியே எதிரி நின்றாரா? என்றால் உள்ளே நின்றார். எந்த சாட்சி அவ்வாறு சொல்லியுள்ளார் என்றால் வாதி அவ்வாறு சொல்லியுள்ளார். எதிரி தீ வைத்ததை நேரடியாக பார்த்ததாக சாட்சிகள் என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த பொருள் பயன்படுத்தி தீ வைக்கப்பட்டது என்று என்னுடைய விசாரணையில் தெரிய வரவில்லை என்றால் சரியல்ல. நான் தீ வைக்க பயன்படுத்திய பொருள் எதுவும் சம்பவயிடத்தில் கைப்பற்றவில்லை. மாதிரி வரைபடத்தில் சம்பவயிடத்தில் சாக்கு பைகள் மற்றும் உளுந்து ஆகியவை கிடந்ததாக துலங்காது என்றால் சரிதான்.

சம்பவயிடத்தின் சுவரில் தீப்புகை படிந்த கறை இருந்ததா? என்றால் இருந்தது. அதனை புகைப்படம் எதுவும் எடுத்து நான் தாக்கல் செய்யவில்லை. அத்தாட்சியில் 8 சாக்குகள் என எழுதி விட்டு, 10 என திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வாழைத்தோட்டம் சேதப்படுத்தியது எனக்கு எப்போது தெரியும் என்றால் புகார்தாரர் சொன்னபோது தான் தெரியும். வீட்டில் வைத்து அவரை விசாரித்தபோது சொன்னார். அதற்கு நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சட்டமாறுதல்அறிக்கையை நான் தயார் செய்தேனா? என்றால் இல்லை. குற்றச்சாட்டு சம்பந்தமாக புகார் மனு அல்லது வாக்குமூலம் பெறாமலும், சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்யாமலும், குற்ற நடந்ததாக கருதி பார்வை மகஜர், வரைபடம், அத்தாட்சி தயார் செய்தது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல.

பிவிசி பைப்பின் நீளம், அகலம், எண்ணிக்கை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வாழைமரங்களை எண்ணிப் பார்த்தேனா? என்றால் எண்ணி பார்த்தேன். நான் வாழைமரங்களை புகைப்படம் எடுத்தேனா? என்றால் இல்லை. பார்வை மகஜர், வரைபடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லும் போது லைட் வெளிச்சம் இருந்ததாக வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா? என்றால் இல்லை.

இரவு நேரத்தில் புகார்தாரர் எதிரியை எவ்வாறு அடையாளம் கண்டார் என்று என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். ஏற்கனவே எதிரி என்ன எண்ணுள்ள பைக்கில் சம்பவயிடத்திற்கு வந்தார் என்று புகார்தாரர் என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் சாட்சிகளுக்கு சம்பவயிடத்தின் அருகே வீடு

இல்லை என்றால் சரியல்ல. வரைபடத்தில் அவர்களின் வீடு காட்டப்படவில்லை என்றால் சரிதான். வாழைத்தோப்பு பக்கத்தில் பார்வை மகஜர் சாட்சிகளின் வீடு இல்லை என்றால் சரியல்ல. கோழிப்பண்ணை உள்ளது. தோட்டக்கலை உதவி இயக்குநருக்கு நான் சேதமதிப்பு கேட்டு கொடுத்த கடிதத்தை இறுதிஅறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை.

சேதமதிப்பு 120 வாழைகளுக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 380 வாழைகள் என்ன ஆனது என்று நான் விசாரித்தேனா? என்றால் இல்லை. சேதமதிப்பு சான்றிதழ் சாட்சியிடம் நேரடியாக வாங்கினோம். 500 வாழை மரங்களில் எவ்வளவு காய் வந்த மரங்கள் என்று தனியாக என்னுடைய விசாரணையில் துலங்காது. தோட்டக்கலை இயக்குநர் சம்பவயிடத்திற்கு வந்தபோது, நான் உடன் செல்லவில்லை. வாழைதோப்பு புகார்தாரருக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து பைக்கை கைப்பற்றும் போது உடனிருந்ததாக கூறப்பட்ட சாட்சிகளின் வீடு சேந்தமரத்தில் இல்லை என்றால் சரிதான். அவர்கள் அங்கு எவ்வாறு வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது, நான் அழைக்கவில்லை. பைக்கை நான் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான்.

சிஎஸ்ஆர், 13 மணிநேரம் காலதாமதத்துடன் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கை 35 மணிநேரம் காலதாமதத்துடன் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கான சிறப்பு காரணம் எதுவும் இல்லை. முதல்தகவல்அறிக்கையில் புகார்தாரரின் கையெழுத்து காவல்நிலையத்தில் வைத்து பெற்றேன். முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யும் போது புகார்தாரர் காவல்நிலையத்தில் இல்லை. எதிரி, புகார்தாரரை ஏசியதினால் புகார்தாரருக்கு அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாக புகார்தாரர்

சொல்லவில்லை. கொலை மிரட்டல் செய்ததினால் உயிர்பயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை. எதிரி அரசு பணியில் இருந்தார் என்றால் தெரியாது.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து புகார் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து சான்று பொருட்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றாலும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.2 வனக்காவலராக பணிபுரிந்து வருவதினால் புகாரை முறையாக விசாரணை செய்யாமல், ஒருதலைபட்சமாக விசாரித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.03 19:21:29 +0530